புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# கள்ளிக்காட்டு இதிகாசத்தில் உழவனின் நிலை

இரா. உமாதேவி
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு.

==========================================================================

## முன்னுரை

அனுபவம் என்ற சன்னல் வழியே வாழ்க்கை என்ற வசந்தத்தை அடைய முடியும். அனுபவத்தை ஆழ்ந்து நோக்கும் போதுதான் தேடல், உள்வாங்கல், பக்குவம், எடுத்துச்சொல்லும் திறன் போன்றவை கிடைக்கப்பெறுகிறது.நாம் அன்றாட வாழ்வில் பார்க்கும், கேட்கும், சுழல்கள் நம்மிடையே ஒரு மாற்றத்தை உண்டாக்குகின்றன. அவ்வகையில் படைப்பிலக்கியவாதிகள் தம் சொந்த வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, பார்த்த கேட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரும் எழுத முனைகிறார்கள்.

“இலக்கியப்பணி என்று எதைச் சொல்வது?
என் ஆத்ம எதிரொலிப்பாக
நான் வாழும் வாழ்க்கையின் ரசனையை
எனக்கு எளிதாகக் கைவரும்
எழுத்தின் மூலம் வெளிக் காட்டுகிறேன்
இதில் சேவை என்பதோ, பணி என்பதோ
இடம் பெறவில்லை
என்னுடைய இன்பங்களை
நான் துய்க்கும் சோக உணர்வுகளை
மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவே
நான் விரும்புகிறேன்
சுற்றிலும் உலகம் சிறியதும் பெரியதுமாக
சாதாரண அசைவுகளில் கூட
வியப்புகள் நிறந்து இயங்குகிறது
அதைப் பார்த்துக்கொண்டிருப்பதே
ஆனந்தம் தான்
அதைத்தான் நான்
பகிர்ந்து கொள்கிறேன்..........
எழுத்து மூலம்” (கே.வெ.கீதா. தி.ஜானகிராமன் - நாவல்கலை )

என்று தி.ஜானகிராமன் தன் அனுபத்தைக் கூறுகிறார்.

தன் வாழ்வில் கண்ட, கேட்ட அனுபவங்களை நம் முன் உயிருள்ள உயிரோட்டமாக இல்லறம், பொருளாதார நிலை, மண்மீது இருக்கும் ஆசை என பேயத்தேவரின் வாழ்க்கை ஓட்டத்தை கள்ளிக்காட்டு இதிகாசம் எனும் புதினமாக அழகுறப் படைத்துள்ளார் வைரமுத்து.

## இல்லறம்

இல்+அறம்=இல்லறம். இல்லறத்தில் வாழ்பவன் சுற்றம், மனைவி, மக்கள் என அவர்களுக்கு துணையாய் நிற்பவனே இல்லறத்தான். அறநெறியில் வாழ்க்கையை வாழ்பவன் தன் வாழ்நாள் முழுதும் வேறு வழியை நாட மாட்டான். இல்லறம் குறித்து பல இலக்கிய

நூல்களில் சுட்டப்பட்டிருந்தாலும் உலகபொதுமறை மிகவும் அழகாக இல்லறம் பற்றி கூறியுள்ளது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள்-50)

மனைவியுடன் வாழும் வாழ்க்கையைச் சிறந்த முறையில் வாழ்பவன் பூமியில் வாழ்ந்தாலும் வானத்துள் வாழும் தேவரும் ஒருவராக வைத்து போற்றப்படுவர் என வள்ளுவர் கூறுகிறார். வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கு ஏற்ப வைரமுத்து அவர்கள் கள்ளிக்காட்டு இதிகாசத்தில் பேயத்தேவரை படைத்துள்ளார். பேர் மட்டுமே பேய்+தேவர்-பேயத்தேவர். தேவர் என்பதற்கு ஏற்றார் போல் தன் சிறு வயதுமுதலே தேவராக (உயர்ந்தநிலையில்) மதிக்கப்பட்டவர் பேயதேவர். பேயத்தேவர் தன் சிறு வயது முதலே விவசாயத்தில் ஊறி தேறியவராக காணப்படுகிறார். பொதுவாக கிராமங்களில் வாலிப இளைஞர்கள் ஊர் சுற்றித் திரியும் காளைகாகவே படைக்கப்படுவார்கள். ஆனால், கருமமே கண்னாகப் படைக்கப்பட்டவர் பேயத்தேவர். வாலிப வயதில் எல்லோருக்கும் ஏற்படும் காதல் அலையில் சிக்காதவர் அல்ல, இருந்தாலும் அழகம்மாவை திருமணம் செய்து வைக்கிறார்கள். அழகம்மா பெயருக்கு ஏற்ற மாதிரி குணத்தில் அழகோ அழகு. இவர்கள் காதலின் புரிதலுக்கு அடையாளமாக ஆறு பிள்ளைகளை பெற்றார்கள். ஆறில் மூன்று போக மூன்று தங்கியது. கள்ளிக்காடு ஒரு வறண்ட பாலைநிலம். நண்டு, பூரான், காடை, கதுவாரிக்கு ஏற்ற நிலம். அந்த கள்ளிப்பட்டியில் அஞ்ஞூறு நிலத்துக்குச் சொந்தக்காரர். கணவன் மனைவி உறவு காலகாலத்துக்கும் போகாத உறவு. கணவன் மனைவி உறவு அழகான ஆழமான உறவு இதை,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" ( குறள் 51)

இல்வாழ்க்கைக்கான சிறந்த பண்பு உடையவளாகித் தன்னை மணந்தவனின் வளமைக்குத் தகுந்தபடி நடப்பவளே சிறந்த வாழ்க்கைத்துணைவி என திருக்குறள் விளக்குறது. குறளுக்கு ஏற்ற மாதிரியே அழகம்மாவைப் படைத்துள்ளார் வைரமுத்து. ஒருநாள் கணவன் மனைவி இருவரும் காட்டில் உழுது கொண்டு இருக்கும் போது காளை மாடு ஒன்று கால் முறிந்து போக பேயத்தேவருக்கு ஒன்னும் பிடிபடவில்லை. அட இதுக்கு போயா கவல படுவ ஆம்பள நான் இருக்கன்னு ஜோடி மாட்டுக்கு இணையா தன் கழுத்துல கலப்பய எடுத்து மாட்டிக்கிட்டவ அழகம்மா. அதுமட்டுமல்ல தன் கணவனைப் பற்றி ஊரார் ஒரு மாதிரி முருகாயி கூட சேர்த்து பேச வந்தது பாருங்க கோபம். அந்த ஊரின் அம்பலக்கல்லு (பஞ்சாயத்துக்கல்லு) மேல ஏறி

" ஏலே பொண்டுகப் பயகளா, எம் புருஷன் வீரியக் காரண்டா, இன்னும் பத்துப் பொம்பளகளப் பதில் சொல்லுவாண்டா அழகம்மா மச்சம் பாத்தவன் ஆயுசுக்கும் ஒருத்தியப் பார்க்க மாட்டண்டா" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-120) என கூறும் போது கணவன் மனைவியின் ஆழத்தை வெளிப்படுத்தியுள்ளார் வைரமுத்து. ஒருநாள் வயக்காட்டிற்கு போய்வந்த தேவர் வாய்க்கு ஏதாவது அரைத்தாள் நல்லா இருக்கும்னு நெனச்சு அழகம்மா கிட்ட கேட்க அவளும் தன்னோட சுருக்கு பையில இருந்து நீவி நீவி ஒரு வெத்தலய எடுத்து கொடுத்தா அத வாங்குன தேவர் அழகம்மாவ வம்புக்கு இழுக்கிறார் . அதற்கு அழகம்மா ,

"பாக்கு மெல்லப் பல்லில்லாத கெழவனுக்குகொமரி வெத்தல கேக்குதா? கொமட்டுல இடிப்பேன்" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-119)

எனும் இடத்தில் அன்றாட கணவன் மனையின் ஊடல்களை அழகாக வெளிப்படுத்தியுள்ளார். வெறும் சந்தோச நிகழ்வுகளை மட்டுமே கொண்டதல்ல புதினம் இழப்புகளும் இழவுகளும் அதில் கிளையோடி காணப்படும். அழகம்மாவின் இழப்பும் அப்படி தான் பேயத்தேவருக்கு. நம் வாழ்வில் ஏதாவது இழந்தால் ஒன்று நல்லாதக நடக்கும் என்பது மண்சார் மக்களின் நம்பிக்கை. அதுபோலவே அழகம்மா இறந்த பொழுது விளைச்சலும் அமோகமாக இருந்தது. "ஆள் செத்தா வெள்ளாம நல்லா வெளையும், வெள்ளாம நல்லா வௌஞ்சா ஆள் செத்தாலும் சாகுமுன்னு சொல்லுவாக ஊர்ல" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-198)
என இழப்புகளைக் கூட உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

பொருளாதாரநிலை

ஒருநாடு வளமாக இருக்க வேண்டுமென்றால் அந்நாட்டின் பொருளாதரம் செழிப்பாக இருக்க வேண்டும். அது போலத்தான் ஒருவீடு நன்றாக இருக்க வேண்டுமென்றால் அவன்

செய்யும் தொழில் நன்றாக இருக்க வேண்டும். தன் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் தான் பேயத்தேவரின் குடும்பம் இருந்தது. தினம் வயக்காட்டில் சென்று உழுதால் கூட அன்றாட தேவைகளை சரியாக பூர்த்தி செய்ய முடியாத நிலை. பேயத்தேவரும் பேரன் மொக்கராசும் செவத்காளையும் மயிலக்காளையும் பூட்டி ஏர் உழுதார்கள். வரம் பாய்ந்தக் கட்டை பேயத்தேவர், அறியாப்பையன் மொக்கராசு. அவருடைய வேகத்துக்கு வாரதவனப் பார்த்து "தை ஒழவு அய்யாட்டுக் கெடடா (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-27) என்றார். அதாவது அந்து ஆட்டு கெடாகளோட ஆட்டு புழுக்கை, மூத்திரம் குப்பை இதெல்லாம் போட்டா நிலத்துக்கு என்ன உரம் கொடைக்குமோ அது தை மாத ஒழவு ஓட்டுனாலே இது எதும் போடமயே கெடைக்கும் எனும் இடங்களில் விவசாயத்தின் போக்கு, நோக்குத் தெரிந்தவராக பேயத்தேவரைப் படைத்துள்ளார் வைரமுத்து. விவசாயிகள் எவ்வளவு பாடுபட்டாலும் அவர்களின் நிலை அடுத்தவர்களின் கையை எதிர்பார்த்தே இருப்பது காலங்காலமாக இருந்து வரும் காலக் கொடுமையாகவே உள்ளது. கடவுளே தன்னுடைய திருமணத்துக்கு குபேரனிடம் கடன் வாங்கியதாக சொல்லுவார்கள். இந்த உலகில் கடன் இல்லாத ஆளே இல்லை. அவர்களுக்கே அந்த நிலை என்றால் பேயத்தேவரின் நிலையைசொல்லவா வேண்டும். பேயத்தேவரின் மூத்த மகள் இரண்டாம் கல்லியானத்துக்கு போடறன் சொன்ன பதினஞ்சு பவுனு போடதனால அப்பன் வீட்டுக்கே தொறத்தப்பட்டாள். நான் வெச்சுக்கிட்ட இல்லன்னு சொல்லறன் இப்ப அப்பன்கிட்ட இல்லன்னு பேயத்தேவர் சொல்லும் போது

"ஒத்து வாழவும் முடியல, ரெண்டாம் பொழப்பும் இப்படியாச் சேன்னு அத்து வாழவும் முடியல வயித்துல துணியக்கட்டிகிட்டேன், வாயிலப் பூட்டுப் போட்டுக்கிட்டேன்னு ஈசுவரன் விட்ட வழின்னு எப்படியோ கெடக்கன்" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-59) என்று அப்பன் வீட்லயே நிறைமாதக் காரி தங்கிப்போனாள். செல்லத்தாயை எப்படியாது புருசன் வீட்டுக்கு புள்ளையோட அனுப்பி வைக்கனும் என்று நினைத்தவர் வண்டிநாயக்கரைப் பார்த்து கடன் வாங்கி தங்கம் வாங்க கடைக்குப் போனார். வண்டிநாயக்கர் தான் பேயத்தேவரின் ஒரே நட்பு. அங்கு பேயதேவருக்கு தலையில் இடி விழுந்தது அழகம்மா இறந்துவிட்டாள் என்று தங்கம் எடுக்க வாங்கிய பணத்தில் மனைவியின் ஈமக் காரியங்களை செய்து முடித்தார்.

வெள்ளாம நல்லா வெளஞ்சா அதுக்கு முன்னாடியே செலவு முந்திக்கும்ன்னு சொல்லுவாங்க. அது போலவே அந்த எடுப்பு நல்லா வெளஞ்சது அத பாத்து பாத்து உச்சி குளிந்தார் பேயதேவர். விவசாயிகளுக்கே உண்டான சிறப்பு அது. விளையும் முன்னே அதுக்கு வேணும் இதுக்கு வேணும்னு கணக்கு போடுறதும் அது முடியாம வேற செலவு பண்ணுவதும் இயற்கையே. பேயதேவரின் நினைப்புல மண்ணுல விழுந்த மாதிரி சின்ன மகள் மின்னலு புருசன் சூத்தபல்லன கொன்னுட்டு ஜெயிலுக்கு போயிட்டன் அந்த பணம் அதுக்கே சரியாப்பேச்சு.

ஊரில் பெரிய ஆம்பள என்ற பெயரில் தேவரைப் படைத்த போதும் பொருளாதாரத்தில் பின் தங்கியவராகவே காணப்படுகிறார்.

மண்மீது கொண்ட ஆசை

விவசாயிகளுக்கு எப்பவுமே தங்கள் நிலம் மீதான ஆசை என்றுமே குறைந்தபாடில்லை. கள்ளிப்பட்டி ஆட்களுக்கு சொல்லவே வேண்டாம். ஒவ்வொரு மண்ணும் அவர்களின் கதை சொல்லும். அரசு அணை கட்ட வேண்டும் என்று ஊர் முழுக்க தண்டூராப் போட்டு இருந்தது. ஆரம்பத்தில் ஊரை விட்டு யாரும் போக மறுத்தார்கள். வேண்டாதவர்களே வந்தாலும் வீட்டுக்கு வந்தா வாங்கன்னு சொல்றது தமிழர்களோட பண்பாடு. அதுபோல தான் அன்னைக்கு தாசில்தார் வந்தப்பவும் கள்ளிப்பட்டி இட்டிலி விக்கிற செவனம்மா பால் சுடவச்சு ஆத்தி குடுத்தா. அத அலச்சியம்மா பார்த்தார் தாசில்தார்.

"கள்ளிப்பட்டிய காலி பண்ணச்சொல்லி வந்திருக்கேன். எனக்கு பால் உச்பசாரமா? கடைசியா சொல்றன் காலிபண்ணிருங்க. இல்லேன்னா காலிபண்ணவப்போம். அய்யா இந்த மண்ணா விட்டா எங்களுக்குத் தெக்க வடக்கத் தெரியாதே, நாங்க எங்க போயி பொழைக்கறது? நீங்க எங்க போயிப் பொழைக்கலாம். பிச்சைக்காரனுக்கு எல்லா வீடும் சொந்த வீடுதான். (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-320)

அரசின் அடக்குமுறை அந்த காலம் முதலே இருந்து வந்ததை வைரமுத்து வெளிப்படுத்தியுள்ளார். உங்கள ஊரவிட்டு வெளியேத்துவதறக்காக அரசாக்கம் திட்டம்

போடல. கலக்டர் எவ்வளவோ எடுத்து சொல்லியும் அவர்கள் கேட்ட மறுத்தார்கள் அவர்களுக்கு புரிய வேண்டும் என கலக்டர் கிராமத்துப் பாசையில் பேசினார்.

*" தேன் கூட்டக் கலைக்காமத் தேனெடுக்க முடியுங்களா ? அவ்வளவு தான் அய்யா தேன் கூட்டக் கலைச்சாத் தேனீக்குத் தேன் குடிக்க வேற பூவுக இருக்கு. இத விட்டா எங்களுக்குப் பொழைக்க பூமி இருக்கா" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-328)*

எனும் இடங்களில் கிராம மக்களின் ஏக்கங்களையும் அழுகைகளையும் உணர்ச்சிபூர்வமாக கொண்டு செல்கிறார் ஆசிரியர். கிராமத்தை விட்டு காலி செய்யும் போது அவர்களின் மனநிலையைக் கண்டு அழதவர்கள் இருக்கவே முடியாது.

*"கத்தாழங்காடே போயிட்டு வாரோம்! கள்ளிச்செடிகளா போயிட்டுவாரோம்! காடைகதுவாலிகளா போயிட்டுவாரோம்! கம்மாக்கரையே போயிட்டிவாரோம்! கரிசத்தரிசே போயிட்டுவாரோம்! சொந்தவீடே போயிட்டுவாரோம்! சுடுகாடே போயிட்டிவாரோம்! மனசுகுள்ள சொல்லிட்டு உள்ளுக்குள்ள அழுகறாக" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-343)*

ஊர் மக்கள் இப்படி அழுதா பேயத்தேவர் எத நெனச்சு அழுவாரு. சோக நிலையிலேயே கதையை ஆசிரியர் எடுத்து செல்கிறார்.

*"தெக்குத்தோட்டம்*
*வௌஞ்சிநிக்குது கம்பங்காடு*
*கடைசி அறுவடை*
*பேயத்தேவரு கண்ணுல கண்ணீரு*
*நசுங்குது ஈரக்கொல ஒடுங்குது உசுரு" (கள்ளிக்காட்டு இதிகாசம் ப-354)*

இப்படி இருக்க அணைக்கட்டுத்தண்ணி விறுவிறுன்னு வரது தெரியுது. ஊர்ல இருக்க மக்கள் எல்லோரும் ஊரையே காலி பண்ணிப்போகுது ஆனா தாத்தாவும் பேரனும் மட்டும் காலி பண்ணாம இருக்காங்க. கிராமங்களில் போதுவாக எல்லோருக்கும் ஒரு வழக்கம் சாவுக்கு இழுத்துகிட்டு இருக்குறவங்களுக்கு ஒருபிடி மண்ணக்கரச்சு ஊத்துனா உசிர் போயிறும்ன்னு சொல்லுவாங்க. அது போலவே பேயத்தேவருக்கு தன் மீது இருந்த காதல் (ஆசை) காரணமா சுவர் இடிந்து விழுந்ததுல மண்னோடயே போயிட்டாரு.

## முடிவுரை

கள்ளிக்காட்டு இதிகாசத்தில் இல்லறம் நல்லறமாக இருக்க வேண்டும் என்பதையும், பொருளாதரத்தில் சீர்குலையாதவர்களே இல்லை என்பதயும் மண்மீது கொண்ட காதலால் மண்ணிலேயே உயிர் விட்ட பேயத்தேவ(ர்)ன் எனும் உழவனின் நிலையையும் அரசின் அடக்குமுறை அக்காலத்திலேயே காணப்பட்ட கொடுமையையும் இக்கட்டுரை விளக்குகிறது.

## ஆய்வுக்கு பயன்பட்ட நூல்கள்


1.கீதா, கோ.வெ, தி.ஜானகிராமன் - நாவல் கலை
நீயு செஞ்சுரி புக் ஹவுஸ்,
பிரைவேட் லிமிடெட், சென்னை-98, டிசம்பர்-1994

2. மு.வரதராசன்னர் - திருக்குறள் தெளிவுரை
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட்
154, டி.டி.கே. சாலை, சென்னை - 60018

3. வைரமுத்து - கள்ளிக்காட்டு இதிகாசம்
மின்னூல் ஆக்கம்-தமிழ்நேசன்
www.tamilebooks.net


## பார்வை நூல்கள்


1.முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் - நாவல் கலையியல்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை- 600113

2.முனைவர் மேகலின் சந்திரா - படைப்பிலக்கியம் - விளிம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை- 600113


********* ********* ********** ********* ********* ********** ********** **********